## தலைப்பு 136 – விளையாட்டுத்துறை அமைச்சு

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

விளையாட்டுத்துறை அமைச்சின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் விளையாட்டுத்துறை அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2019 மே 29 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் அமைச்சிற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 மே 27 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான விளையாட்டுத்துறை அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் *அமைச்சினால்* வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் *அமைச்சின்* நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

### 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(ஈ) ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்கள் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) விளையாட்டுத்துறை அமைச்சின் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமைால் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக கூறுவதற்கு முடியாதுள்ளது

(ஆ) அமைச்சினால் முன்னைய ஆண்டிற்குரியதாக நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமைால் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்படவில்லை.

### 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.6.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் தொடர்பான இணக்கக் கூற்று

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதியில் அமைச்சின் பதிவேடுகளின் பிரகாரம் உத்தியோகத்தர் கடன் மீதிகளின் கூட்டுத்தொகை மற்றும் முற்பணக் கட்டுப்பாட்டுக் கணக் மீதி ரூபா 24,659,853 ஆக இருந்ததுடன் அது திறைசேரி பதிவேடுகளின் பிரகாரம் ரூபா 24,835,351 ஆக இருந்தமையால் அமைச்சு மற்றும் திறைசேரி பதிவேடுகளின் பிரகாரம் ரூா 175,498 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டது | வேறுபாடுகளை இனங்கண்டு சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | அமைச்சு மற்றும் திறைசேரி பதிவேடுகளின் பிரகாரம் மீதிகளுக்கு இடையே ரூபா 175,498 ஆன வேறுபாடு அவதரிக்கப்பட்டது அதன் பிரகாரம் திறைசேரியில் கூடுதலாக காண்பிக்கப்பட்டுள்ள ரூபா 175,498 ஐ சீராக்குவதற்கு நிதி ஏற்பாடு கோரி பாதீட்டு பணிப்பாளர் நாயகத்திற்கு வேண்டுகோள் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. |

#### 1.6.2 நிதி நிலைமை கூற்று

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதி நிலைமைக்கூற்றில் 2018 சனவரி 01 இல் உள்ளவாறு ஆதனங்கள், பொறிகள் மற்றும் இயந்திரங்களின் பெறுமதி ரூபா 238,532,264 ஆக இருந்ததுடன் நிதியல்லாத சொத்துக்கள் தொடர்பான கூற்றில் ரூபா 649,893,382 ஆக இருந்தமையால் ரூபா 411,360,118 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | வேறுபாட்டிற்கு காரணங்கள் இனங் காணப்பட்டு சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2017 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்கள் மாத்திரம் 2018 ஆம் ஆண்டின் ஆரம்ப மீதிகளாக திறைசேரியில் கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் 2018 ஆம் ஆண்டில் ஆரம்ப மீதிகளுடன் |

| | | | |
|---|---|---|---|
| | | | உள்ளடக்கப்பட்ட சொத்துக்களாக இருந்தமையால் இவ்வேறுபாடு ஏற்பட்டிருந்ததுடன் எதிர்வரும் ஆண்டுகளில் இவ்வாறான வேறுபாடுகள் ஏற்படாது. |

**1.6.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

**கணக்காய்வு அவதானிப்பு**

| **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு** | **இணங்காமை** | **பரிந்துரை** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|---|
| 1973 இன் 25 ஆம் இலக்க தேசிய விளையாட்டுக்கள் சட்டத்தின் 41 ஆம் பிரிவு | இலங்கை தேசிய ஒலிம்பிக் குழுவின் நிதி செயற்பாட்டிற்காக முறையான நிதி செயல்வழிகாட்டல் கோவை யொன்றும் நிர்வாக பிரமாணங்கள் தயாரித்து செயற்படுத்துவதற்காக கட்டளையிடுவதற்கு அமைச்சினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | இலங்கை தேசிய ஒலிம்பிக் குழுவின் நிதி செயற்பாட்டிற்காக முறையான நிதி செயல் வழிகாட்டல் கோவையொன்றும் நிர்வாக பிரமாணங்கள் தயாரித்து செயற்படுத்துவதற் காக கட்டளையிடப்பட வேண்டும். | வழங்கப்பட்டுள்ள பரிந்துரையின் பிரகாரம் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் |

**2. நிதி மீளாய்வு**

**2.1 கட்டுநிதி முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **பிரதான கணக்காய்வு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக ரூபா 2,490.7 ஆன கட்டுநிதி பெற்றுக் கொள்வதற்கு திட்டமிடப்பட்டு ரூபா 2,795.9 தொகை கட்டுநிதி கோரப்பட்டிருந்த போதிலும் திறைசேரியிடமிருந்து ரூபா 674.4 | திட்டமிடப்பட்டதன் பிரகாரம் கட்டுநிதி பெற்றுக் கொள்ளப்பட்டு குறித்த செயற்பாடுகளை நிறைவேற்ற வேண்டும். | கட்டுநிதி திடடமிடப்பட்டு வேண்டப்பட்ட போதும் பொது திறைசேரியிலிருந்து விண்ணப்பிக்கப்பட்ட கட்டுநிதி அளவு |

| | | |
|---|---|---|
| மில்லியனான கட்டுநிதி மாத்திரம் கிடைத்திருந்தது. இதன் காரணமாக திட்டமிடப்பட்டதன் பிரகாரம் 1000 பாடசாலைகளில் கிரிக்கட் விளையாட்டு அபிவிருத்தி, வாகனங்கள் மற்றம் பராமரிப்புச் செலவினம் மேற்கொள்ளல், விளையாட்டு மருத்துவ நிறுவகத்தின் மருத்துவ வழங்கல் மற்றம் மூலதன மாற்றல் போன்ற செயற்பாடுகளை நிறைவேற்ற முடியாதிருந்தது. | | கிடைக்காமை இதற்கு காரணமாக இருந்தது. |

**2.2 செலவின முகாமைத்துவம்**

---------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மூலதன செலவின விடயங்களுக்காக மிகை நிதி மேற்கொள்ளப்பட்ட தால் அந் நிதிஏற்பாடுகளிலிருந்து பயன்படுத்தப்பட்டதன் பின்னர் சேமிப்புக்கள் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதிஏற்பாடுகளின் 66 சதவீதம் அளவினைக் கொண்டிருந்தது. | நிதிப்பிரமாணம் 50 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | முன்னைய ஆண்டில் செலவிடப்பட்ட செலவினம் மற்றும் எதிர்வரும் ஆண்டிற்கான செலவினத்தை அடிப்படையாகக் கொண்டு பாதீடு தயாரிக்கப்படு வதுடன் இயலுமான ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் நியாயமான எதிர்வுகூறல் பின்பற்றப்பட்டு பாதீட்டை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 7 மீண்டெழும் செலவின விடயங்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த ரூபா 46,219,000 மொத்த தேறிய நிதிஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது. | - மேற்படி . | முன்னைய ஆண்டில் செலவிடப்பட்ட செலவினம் மற்றும் எதிர்வரும் ஆண்டிற்கான எதிர்பார்க்கப்பட்ட செலவினத்தை அடிப்படையாகக் கொண்டு பாதீடு தயாரிக்கப்படுவதுடன் இயலுமான ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் நியாயமான எதிர்வுகூறல் பின்பற்றப்பட்டு பாதீட்டை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (இ) | 66 செலவின விடயங்களுக்காக மிகை நிதி மேற்கொள்ளப்பட்ட காரணத்தால் அச்செலவின விடயங்களில் நிதிஏற்பாடு பயன்படுத்தப்பட்டதன் பின்னர் சேமிப்புக்கள் ஒதுக்கீடு செய்யப்பட்ட அச்செலவின விடங்களுக்குரிய நிதிஏற்பாடுகளின் 10 சதவீதம் முதல் 97 | - மேற்படி . | முன்னைய ஆண்டில் செலவிடப்பட்ட செலவினம் மற்றும் எதிர்வரும் ஆண்டிற்கான எதிர்பார்க்கப்பட்ட செலவினத்தை அடிப்படையாகக் கொண்டு பாதீடு தயாரிக்கப்படுவதுடன் இயலுமான ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் நியாயமான எதிர்வுகூறல் பின்பற்றப்பட்டு பாதீட்டை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

சதவீதம் வரையான அளவினைக் கொண்டிருந்தது.

## 2.3 வைப்புக்கள் மீதி

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| அமைச்சின் பொது வைப்புக் கணக்கிற்குரிய மொத்தம் ரூபா 8.37ஆன 16 வைப்புக்களுக்குரிய 02 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக தீர்வுசெய்வதற்கு அல்லது அரச வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் பொதுவைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. | நிதிப் பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | மேலும் நிறுத்தி வைப்பதற்கு காரணங்கள் இல்லாமல் இருந்தால் அல்லது 06 மாதங்களுக்குள் அரசின் வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

## 3.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| **இலங்கையர் வெற்றிகொண்ட சர்வதேச வெற்றிகள்** | | |
| 2017 ஆம் ஆண்டின் போது இலங்கை விளையாட்டு வீர வீராங்கணைகள் 08 போட்டிகளில் பங்குபற்றி 29 தங்கம், 39 வெள்ளி மற்றும் 11 வெண்கலப் பதக்கங்கள் என 79 பதக்கங்களை வென்றுள்ளனர். மீளாய்வாண்டின் போது 10 போட்டிகளில் பங்குபற்றி 23 தங்கம், 16 வெள்ளி மற்றும் 22 வெண்கலப் பதக்கங்கள் என 61 பதக்கங்களை வென்றுள்ளனர். | முறையான திட்டமொன்னிறன் பிரகாரம் சர்வதேச போட்டி வெற்றிகளுக்காக வீர வீராங்கனைகளைப் பயிற்சியளிப்பது தொர்பில் விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும் | கருத்து தெரிவித்திருக்கவில்லை |

## 3.2 செயற்திட்டங்கள் நிறைவேற்றுவதில் தாமதம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | அமைச்சினால் வல்வெட்டிதுறை நீச்சல் தடாக நிர்மாணம், தியகம மஹிந்த ராஜபக்ஷ தேசிய அகடமியின் 400 மீற்றர் செயற்கை ஓடுபாதை அதன் மலசலகூட முறைமை மற்றும் நுழைவு வீதியை அமைத்தல், குருணாகல் மலியதேவ வித்தியாலயத்தின் சுடுதல் மற்றும் வில்வித்தை நிலையமொன்றை அமைத்தல் மற்றும் 04 செயற்திட்டங் களுக்காக ரூபா 429.39 மில்லியன் நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் போது அச்செயற்திட்டத்திற்காக ரூபா 222.48 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. இச்செயற்திட்டம் மீளாய்வாண்டின் போதும் 2019 மே மாதம் அளவில் பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும் அக்காலப்பகுதியில் நிறைவேற்றப் பட்டிருக்கவில்லை. | நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதியில் செயற்திட்டத்தை நிறைவேற்றுவதற்கு முடியுமான வரையில் தேவைப்பாடு இனங் காணப்பட்டு திட்டம் முறைப்படி தயாரிக்கப்பட்டு குறித்த காலப் பகுதிக்குள் நிறை வேற்ற நடவடிக்கை வேண்டும். | தாமதத்தை தவிர்ப்பதற்காக பொருத்தமான நடைமுறையொன்று பின்பற்றப்பட வேண்டும். |
| (ஆ) | 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 108.87 மில்லியன் மதிப்பிடப்பட்ட நிதிஏற்பாடுகளின் கீழ் நுவரெலியா விளையாட்டு இல்ல நிர்மாண செயற்திட்டம் ஆரம்பிக்கப் பட்டிருந்ததுடன் அது 2017 செப்தம்பர் மாதத்தின் போது பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்தது. மீளாய்வாண்டின் இறுதி வரையில் அச்செயற்திட்டத்திற்காக ரூபா 30.26 மில்லியன் செலவிடப்பட்டிருந்த போதிலும் அதன் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதியில் செயற்திட்டத்தை நிறைவேற்றுவதற்கு முடியுமான வரையில் தேவைப்பாடு இனங்காணப்பட்டு திட்டம் முறைப்படி தயாரிக்கப்பட்டு கறித்த காலப்பகுதிக்குள் நிறைவேற்ற நடவடிக்கை வேண்டும். | தாமதத்தை தவிர்ப்பதற்னகாக பொருத்தமான நடைமுறையொன்றை பின்பற்றப்பட வேண்டும். |

### 3.3 பெறுகைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| அமைச்சின் மின்பிறப்பாக்கி இயந்திரம் மற்றும் காற்றுச்சீராக்கி முறைமையில் 2017 ஆம் ஆண்டிற்காக பராமரிப்பதற்கு 07 நிறுவனங்களிடமிருந்து கூறுவிலை கோரப்பட்டிருந்தது. அதில் ஒரு கேள்விதாரரால் மாத்திரம் கூறுவிலை சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அவ்வழங்குனருக்கு ரூபா 2.52 மில்லியன் ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது பராமரிப்பு நடவடிக்கைகளுக்காக கூறுவிலை கோராமல் முன்னைய வழங்குனரிடமிருந்து ரூபா 2.77 மில்லியனுக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. | அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் 1.2.1 வழிகாட்டலின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சேவை திருப்திகரமாக இருந்தால் மாத்திரம் மற்றும் பொருளாதார ரீதியாக செயற்திறனாக இருந்தால் அங்கீகரிப்பதாக செயலாளர் அறிவித்திருந்தார். இதற்காக 2018 ஆம் ஆண்டிற்குரிய பெறுகை செயற்பாடுகள் நிறைவேற்றப்பட வில்லை. இங்கு பொருளாதார ரீதியாக பாதகமொன்று இடம் பெறவில்லை. |

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) அமைச்சிற்குரிய மோட்டார் வாகனமொன்று 03 ஆண்டு காலமாக விளைவற்றும் குறைப் பயன்பாட்டிற்கு உட்பட்டுக் காணப்பட்டது. | 1997 செப்தம்பர் 30 ஆந் திகதிய 353 ஆம் இலக்கம், 2009 நவம்பர் 13 ஆந் திகதிய 438 ஆம் இலக்கம் மற்றும் 2003 சனவரி 03 ஆந் திகதிய 353(5) ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை மற்றும் நிதிப்பிரமாணம் 771 இன் பிரகாரம் விளைவற்றும் குறைப் பயன்பாட்டுடனும் காணப்பட்ட சொத்துக்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | மோட்டார் வாகனத்தை ஓட்டத்திலிருந்து அகற்றுமாறு கைதவிர்ப்புக் குழு தீர்மானித்திருந்தது. இவ்வண்டியை பாடசாலை மாணவர்களின் பயன்பாட்டிற்காக கல்வி அமைச்சின் செயலாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) வெளித்தரப்பினருக்கு வழங்கப்பட்டுள்ள சொத்துக்கள் | | |
| அமைச்சிற்குரிய மோட்டார் வண்டியொன்று சுகததாச தேசிய விளையாட்டு தொகுதி அதிகாரசபைக்கும் விளையாட்டு அபிவிருத்தி திணைக்களத்திற்கும் விடுவிக்கப்பட்டிருந்தது. | அமைச்சின் நோக்கங்கள் மற்றும் இலக்குகளை நிறைவேற்றுவதற்காக வழங்கப்பட்டுள்ள சொத்துக்களை வேறு நிறுவனங்களுக்கு | சுகததாச தேசிய விளையாட்டு தொகுதி அதிகாரசபையின் தலைவரின் வேண்டுகோளின் பிரகாரம் 2019.09.28 ஆந் திகதி |

| | | |
|---|---|---|
| | கையளிக்கும் போது அமைச்சின் நோக்கங்களை நிறைவேற்றுவதில் தடையொன்று ஏற்படாமல் இருப்பதற்கும் அச்சொத்துக்களை முறைப்படி கையளிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | வரை மாத்திரம் வண்டி கடமைகளுக்காக ஒதுக்கப்பட்டிருந்தது. ஜீப் வண்டியை அமைச்சிற்கு கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு 2018.12.18 ஆந் திகதி விளையாட்டுக்கள் அபிவிருத்தி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (இ) வருடாந்த பொருள் மெய்மையாய்வு<br>------------------------------------------------------------<br>2018 ஆம் ஆண்டிற்குரிய பொருள் மெய்மையாய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டியிருந்த மிகை மற்றும் பற்றாக்குறை தொடர்பாகவும் ஏனைய பரிந்துரைகள் தொடர்பாகவும் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2016 மார்ச் 31 ஆந் திகதிய 05/2016 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகள் மற்றும் நிதிப்பிரமாணம் 752(4) மற்றும் 770 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2018 ஆம் ஆண்டிற்குரிய பொருள் மெய்மையாய்வு அறிக்கையில் சுட்டிக் காட்டியிருந்த விடயங்களின் பிரகாரம் மிகை மற்றும் பற்றாக்குறை தொடர்பாகவும் நி.பி 752(4) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) சொத்துக்களை பதிவேடுகளுக்கு உட்படுத்தல்<br>----------------------------------------------------------------------<br>அமைச்சிற்கு சொந்தமான ரூபா 12,129,876 தொகையான மின்பிறப்பாக்கி இயந்திரம் சொத்துக்கள் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 751 இன் பிரகாரம் அனைத்து சொத்துக்களையும் பதிவேடுகளுக்கு உட்படுத்த வேண்டும். | Cigas முறைமைக்கு நிலையான சொத்துக்களை ஆரம்ப மீதிகளாக உள்ளடக்குவதற்கு 2018 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் இச்சொத்துக்கள் இவ்வாண்டில் ஆரம்ப மீதிகளாக சொத்துக்கள் பதிவேட்டில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் . |

### 3.5 முகாமைத்துவ பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 250,764 ஆக இருந்ததுடன் அந்நிலுவை கடன் மீதிகள் 02 ஆண்டுகள் முதல் 05 காலமாக இருந்து வந்த போதிலும் அவற்றை அறவிடுவதற்கு அமைச்சு தவறியிருந்தது. | ஓய்வுபெறல், மரணித்தல் அல்லது சேவை முடிவுறுத்திச் உத்தியோகத்தரொருவர் மற்றும் அரச கூட்டுத்தாபனத்திற்கு விடுவிக்கப்பட்டிருந்த உத்தியோகத்தரொருவரின் கடன் மீதி தொடர்பாக தாபன விதிக்கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டிருந்த ஏற்பாடுகள் பின்பற்றப்பட வேண்டும். | கட்டாய ஓய்வூதியம் பெற்றப்பட்டதன் பின்னர் ரூபா 116,015 தொகை ஒரு உத்தியோகத்தரிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதுடன் மேலும் ஒரு உத்தியோகத்த ரொருவரிடமிருந்து ரூபா 134,751 அறவிடுவதற்கு சட்டமா அதிபர் ஊடாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |

## 4. நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்துகொள்ளல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதானகணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் தொடர்பான ஐக்கிய நாடுகளின் 2030 ஆண்டு ''நிகழ்ச்சிநிரல்'' தொடர்பாக விளையாட்டு அமைச்சு அறிந்திருந்த போதிலும் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை செயற்படுத்துவதற்காக அமைச்சினால் வழங்கப்பட்ட உள்ளக சுற்றறிக்கை அல்லது வழிகாட்டல் எதுவும் காணப்படவிலலை. | அமைச்சினால் நிலைபேறான அபிவிருத்தி நொக்கங்களை செயற்படுத்துவதற்காக தயார்படுத்தல் தொடர்பாக முறையான திட்டமிடல் மூலம் அதற்காக தயார்படுத்தப்பட வேண்டும். கொள்கை மற்றும் உரிய சட்டத்திற்கு இணங்க நடவடிக்கை எடுப்பதற்கு நிறுவனத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை செயற்படுத்துவது தொடர்பாக அமைச்சினால் செயலமர்வொன்று தேவையான வழிகாட்டல் வழங்கப்பட்டிருந்தது. நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சிகளுக்காக அமைச்சின் பதவியணியினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளதுடன் இது விரிவான விடயப்பரப்பாக இருப்பதால் பதவியணியினர் பயிற்சியளித்தல் தொடர்பாக எதிர்காலத்தில் தேவையான திட்டங்கள் தயாரிக்கப்பட வேண்டும். |

## 5 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 5.1 உள்ளகக் கணக்காய்வு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த கொடுப்பனவு உறுதிச்சீட்டு பரிசோதனை செயற்பாடு நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | நி.பி 134(2) இன் பிரகாரம் உள்ளக கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டம் தயாரிக்கப்பட வேண்டியதுடன் அதன் கடமைகள் நிறை வேற்றப்பட வேண்டும். | உள்ளகக் கணக்காய்வு நடைமுறைகளை முறையாக முகாமைத்துவம் செய்வதற்கு உத்தியோகத்தர்களை தொடர்புபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |